

# 2022

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

නවීන තාක්ෂණ පිළිබඳ ආතර් සී ක්ලාක් ආයතනය.

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம்.

**Arthur C  Clarke Institute for Modern Technologies.**

## நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம்

**உள்ளடக்க அட்டவணை** பக்க எண்


| | | | |
|---|---|---|---|
| 1.0 | | பொது தகவல்கள் | 1 |
| | 1.1 | ஆளுகை சட்டம் | 1 |
| | 1.2 | தொலைநோக்கு | 1 |
| | 1.3 | செயற்பணி | 1 |
| | 1.4 | ஆளும் அமைச்சு | 1 |
| | 1.5 | ஆளுநர் சபை உறுப்பினர்கள் – 2022 | 2 |
| | 1.6 | சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய விபரக்குறிப்புக்கள் சுருக்கமாக | 3 |
| | 1.7 | அமைப்பாண்மை கட்டமைப்பு | 4 |
| 2.0 | | தலைவரின் செய்தி | 5 |
| 3.0 | | பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 6 |
| 4.0 | | நிறுவகத்தின் பிரிவுகள் | 10 |
| 5.0 | | பிரதான கருத்திட்டங்களின் செயலாற்றுகை சிறப்பம்சங்கள் | 11 |
| 6.0 | | ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் சேவைகள | 14 |
| | 6.1 | எந்திரவியல் மற்றும் தகவல் மற்றும் தொழில்நுட்பத்தில் தொழிற்துறையினை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் | 14 |
| | 6.2 | எந்திரவியல்.்.தகவல் தொழில்நுட்ப துறையில் அக ஆராய்ச்சி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் | 18 |
| | 6.3 | வானியலில் ஆராய்ச்சி திட்டங்கள் | 24 |
| | 6.4 | சேய்மை உணரி (RS) மற்றும் புவி பட வரைபியல் தகவல் முறையில் (GIS)ஆராய்ச்சி கருத்திட்டங்கள் | 26 |
| | 6.5 | ஆராய்ச்சி வெளியீடுகள் | 27 |
| | 6.6 | சோதனை மற்றும் அளவீடுகள், வன்பொருள் திருத்துகை மற்றும் உசாவுகை | 27 |
| 7.0 | | பயிற்சி கல்வி மற்றும் தகவல் பிரச்சாரம் | 31 |
| | 7.1 | தொழில்சார்பியலாளருக்கான தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (CPD) தொடர்பாடல் | 31 |
| | 7.2 | அடிப்படை மற்றும் இடைநிலை மட்டத்து தொழில்நுட்பவியல் பயிற்சி | 32 |
| | 7.3 | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பிரபல்யப்படுத்துதலும் தகவல்களினை பரப்புதலும் | 33 |
| | 7.4 | நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவக நூலகம் | 34 |
| 8.0 | | மனித வள முகாமைத்துவம் | 36 |
| 9.0 | | 2022 ஆம் ஆண்டுக்கான நிதியியற் கூற்றுக்கள் | 37 |
| 10.0 | | முந்தைய 10 ஆண்டுகளில் நிதி சிறப்பம்சங்கள் | 60 |
| 11.0 | | திட்டமிடப்பட்ட குறுகிய மற்றும் இடைதவணை நடவடிக்கைகளின் சுருக்கம் | 61 |
| 12.0 | | கணக்காய்வு முகாமைத்துவ குழு அறிக்கை 2022 | 63 |
| 13.0 | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2022 | 65 |
| 14.0 | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 71 |

# 1.0 பொது தகவல்கள்

## 1.1. ஆளுகை சட்டம்

நியதி சட்ட கூட்டுத்தாபனமான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிலையமானது. கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவின் அகப்பாட்டெல்லைக்குள் செயற்படுகின்றது. 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிலையத்தினை பின்தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியன்று 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை பாராளுமன்ற விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தினால் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம் தாபிக்கப்பட்டது.

சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் செயற்பாடுகள் வருமாறு:

(அ) இலங்கையில் நவீன தொழில்நுட்பவியல் அறிமுகப்படுத்துகையை விரைவுபடுத்துவதற்கு

(i) நவீன தொழில்நுட்பவியல் பிரயோகத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஆரம்பித்தல், மேம்படுத்தல், நடாத்துதல்

(ii) நவீன தொழில்நுட்பவியல் பிரயோகங்கள் தொடர்பில் செயலாற்றும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு அது தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் உதவிகளை வழங்குதல்

(iii) அரச தனியார் துறைகளினால் பொறுப்பேற்கப்பட்டவற்றின் தேவைப்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்கு நவீன தொழில்நுட்பவியல் ஆளணிகளை பயிற்றுவித்தல்

(ஆ) எதிர்கால ஆய்வுகளை மேம்படுத்துவதற்கு

நவீன தொழில்நுட்பவியலின் பரப்பெல்லைக்குள் தொடர்பாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், நுண் மின்னணுவியல், விண்வெளி தொழில்நுட்பம், மனித எந்திரவியல், ஒளிப்படவியல் மற்றும் புதிய சாதனங்கள் என்பன உள்ளடங்கும்.

## 1.2. தொலைநோக்கு

பிராந்தியத்தில் நவீன தொழில்நுட்பவியலில் முன்னணி புத்தாக்க நிலையமொன்றாகுதல்.

## 1.3. செயற்பணி

புத்தாக்கம், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும், பயிற்சி, கைத்தொழில் சேவைகள் மற்றும் சர்வதேச கூட்டுழைப்புக்கள் என்பனவற்றினூடாக அக அடிப்படையிலான நவீன தொழில்நுட்ப செயற்றிறன்களை விருத்திசெய்தல், வளர்த்தல் மற்றும் துணைமையாக இருத்தல்

## 1.4. ஆளும் அமைச்சு

கல்வி அமைச்சு. (*திறன் மேம்பாடுஇ தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புதுமைகளுக்கான மாநில அமைச்சகம்*)

## 1.5. ஆளுநர் சபை உறுப்பினர்கள் – 2022

| இல. | பெயர் | சபையில் வகிக்கப்படும் பதவி | காலவரையறை | |
|---|---|---|---|---|
| | | | இலிருந்து | வரையில் |
| 01 | பேராசிரியர் சிசில் குமாரவது | தலைவர். ஆளுநர் சபை | ஜனவரி | ஆகஸ்ட் |
| 02 | எந்திரி (கலாநிதி) சனத் பனாவென்னகே | பணிப்பாளர் நாயகம் மற்றும் சி.நி.அதிகாரி ந.தொ.ஆ.சி.கி.நி. உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | டிசம்பர் |
| 03 | பேராசிரியர் கெ.பி.எஸ். சந்தன ஜயரட்ன | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | ஆகஸ்ட் |
| | | தலைவர். ஆளுநர் சபை | செப்டெம்பர் | டிசம்பர் |
| 04 | பேராசிரியர் என்.டி. குணவர்தன | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | டிசம்பர் |
| 05 | திரு. மெரிக் குணரத்ன | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | டிசம்பர் |
| 06 | திரு ரஜித்தா தஹனாயக | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | டிசம்பர் |
| 07 | திரு. சுஸ்ஹெனா ரணதுங்க | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | டிசம்பர் |
| 08 | திருமதி.யு.உடுகஹபடுவ | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | மார்ச் |
| 09 | பேராசிரியர்.எ.கெ.டபிள்யு. ஜயவர்த்தன | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | டிசம்பர் |
| 10 | பேராசிரியர் .. ரஞ்சித் பிரேமலால் டி சில்வா | உறுப்பினர், ஆளுநர் சபை | ஜனவரி | டிசம்பர் |
| 11 | பேராசிரியர். சுதந்த லியனகே | உறுப்பினர், ஆளுநர் சபை | மே | செப்டெம்பர் |
| 12 | திரு.எஸ்.யு.சந்திரகுமாரன் | உறுப்பினர், ஆளுநர் சபை | ஏப்ரல் | டிசம்பர் |

**2022ஆம் ஆண்டில் இடம் பெற்ற சபை கூட்டங்கள்**

| சபை கூட்டத்தின் இலக்கம் | கூட்டத்தின் திகதி |
|---|---|
| 2022/01 | ஜனவரி - 25 |
| 2022/02 | பெப்ரவரி - 22 |
| 2022/03 | மார்ச் - 22 |
| 2022/04 | மே - 24 |
| 2022/05 | ஜூலை - 26 |
| 2022/06 | செப்டெம்பர் - 27 |
| 2022/07 | ஒக்டோபர் - 31 |
| 2022/08 | டிசம்பர் - 20 |

## 1.6 சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய விபரக்குறிப்புக்கள் சுருக்கமாக

<u>சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய விபரக்குறிப்புக்கள் சுருக்கமாக</u>

**எந்திரி (கலாநிதி) பி.சனத் பனாவென்னகே**
PhD, MSc, MBA, CEng., FIE(SL),
MIET(UK)
பணிப்பாளர் நாயகம் மற்றும் சி.நி.அ.

**திருமதி. (எந்திரி) கமணி எதிரிவீர**
BSc. Eng., CEng., MIE(SL), MPA
பிரதி பணிப்பாளர் நாயகம்
(தொழில்நுட்பவியல் தொழிற்பாடு)

**திருமதி. ஜி.எச்.சி. ஜயராணி**
**LLB,**AAL, MBASL, MPM
சிரேட்ட பிரதி பணிப்பாளர்
(நிர்வாகம் மற்றும் மனிதவளம்)

**திரு. ஆர்.ஏ.எஸ்.எஸ். குணசேகர**
BSc, PG Dip., MTech
முதன்மை ஆராய்ச்சி விஞ்ஞானி மற்றும் பதில் பணிப்பாளர் விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடு

**திரு.ஜெ.கெ. ஜயவர்த்தன**
BSc. Eng., PG Dip., CEng., MIE(SL)
பணிப்பாளர்
(தொடர்பாடல் எந்திரவியல்)

**திருவதி. (எந்திரி) ஜெ.டி.பி.எஸ். அதுரலிய**
BSc. Eng., MSc, CEng. MIE(SL),
MIET(UK)
பணிப்பாளர் (மின்னணுவியல் எந்திரவியல்)

**திரு.ஆர்.பி. தசநாயக**
BSc, PG Dip., MSc,
சிரேட்ட கணனி பகுப்பாய்வாளர் மற்றும் பதில் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்)

**எந்திரி எஸ்.ஏ. தசனாயக**
BENG.,PG Dip.,MBA
சிரேட்ட பிரதி பணிப்பாளர்(தகவல் தொழில்நுட்பம்)

## 1.7 அமைப்பாண்மை கட்டமைப்பு



## 2.0 தலைவரின் செய்தி

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் (ACCIMT) 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் இந்தச் சுருக்கமான செய்தியை நிறுவனத்தின் ஆளுநர் சபையின் தலைவர் என்ற ரீதியில் வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

2022 ஆம் ஆண்டானது, நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்திற்கு மட்டுமல்ல,முழு நாட்டிற்குமே மிகவும் சவாலான ஆண்டாக இருந்தது.சவால் மிக்க சூழல் அதுபோன்று குறைந்த அளவிலான வேதனக்கொடுப்பனவு போன்ற காரணங்களின் காரணமாக ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் மிகுந்த சிக்கல்கள் இருந்தபோதிலும் நிறுவனம் அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் பிற தொழில்நுட்ப நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைய முடிந்தது.

நானோ செயற்கைக்கோள் திட்டம் உட்பட விண்வெளி தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாடுகளில் நிறுவனம் சாதித்த வெற்றிக்கு சர்வதேச நிறுவனங்களுடன் முன்னெடுக்கப்பட்ட ஒத்துழைப்பு ஒரு மூலோபாய காரணியாக உள்ளது. இந்த ஒத்துழைப்புகளுடன் மேலதிகமாக, நிறுவனம் தொழில்துறையில் உள்ள பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் வெற்றிகரமான கூட்டாண்மைகளையும் உருவாக்கியுள்ளது. பெருந்தோட்டத் துறை, கைத்தொழில் உற்பத்தித் துறை மற்றும் போக்குவரத்துத் துறை (குறிப்பாக புகையிரதம்) போன்ற துறைகளுக்கு இத்தகைய ஒத்துழைப்புகள் மூலம் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்ப தீர்வுகள் சிறப்பான முறையில் குறிப்பிடத்தக்கவை.

இதே வேளையில், நிறுவனமானது தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி மற்றும் பிற வகையான பயிற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. அத்துடன், நிறுவனமானது அது வழங்கும் ஒரே அடிப்படை சேவையான வானியல் துறையில் குறிப்பிடத்தக்க வகையில் சிறந்த முன்னேற்றத்தினை அடைந்துள்ளது.

**பேராசிரியர் கெ.பி.எஸ்.சி. ஜயரத்ன**
**தலைவர்**
**ஆளுனர் சபை**

# 3.0 பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை

மீளாய்வு செய்யப்படும் ஆண்டில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்ப சேவைகள், பயிற்சி மற்றும் ஆலோசனைகள், அத்துடன் உபாய ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்நுட்ப அறிவுத் துறைகளில் தேசிய மற்றும் உள்ளக திறன் அபிவிருத்தி என்பன உள்ளடங்கலாக முக்கிய தொழிற்பாட்டு துறைகளில் நிறுவனம் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்தது. கொவிட்- 19 தொற்றுநோய்க்குப் பினனர் ஏற்பட்ட பாதகமான பொருளாதார நிலைமைக்கு மத்தியிலும், நிறுவனம் தடைகளை வெற்றிகரமாக தாண்டி, தொடர்ந்தும் கணிசமான முன்னேற்றங்களை அடைந்ததுள்ளது.

2022 மார்ச் 24, அன்று, உயர் 6 ரு நெநோ -செயற்கைக்கோள் முஜவுளுருநே ஐ சுற்றுப்பாதையில் செலுத்தியதன் மூலம் நிறுவனம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை தொடர்பான பல்வேறு கொள்கை மற்றும் மூலோபாய ஆவணங்களில் தேசிய திறன் மேம்பாட்டிற்கான முன்னுரிமையாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியான விண்வெளி தொழில்நுட்பத்தில் தேசிய திறன்களை உருவாக்க மற்றும் மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் திட்டத்தில் இந்த ஏவுதல் ஒரு முக்கியமான படியாகும். செயற்கைக்கோளின் வடிவமைப்பு, விருத்தி, சோதனை, ஏவுதல் மற்றும் சுற்றுப்பாதையில் செயல்பாடு ஆகியவை ஐந்து பகுதிகள் கொண்ட சர்வதேச கூட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த திட்டத்தில் ஜப்பானின் கியூ இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் , சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பானின் தொழில்துறை பங்குதாரர்களான அட்னிக்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் ஹராடா சீகி கார்ப்பரேஷன் ஆகியவை அடங்கும். புவி கண்காணிப்பு நிழற்பட பணி, செயற்கைக்கோள் அடிப்படையிலான இணையத்தில் விடயங்கள், அயன மண்டல உணர்திறன், அதிவேக தகவல் தொடர்பு மற்றும் நியம கனசதுர வடிவ ஊர்தி என்பவை உள்ளிட்ட ஐந்து சுற்றுப்பாதை ஆராய்ச்சி பணிகள் இந்த செயற்கைக்கோளில் அடங்கும்.

நவீன தொழில்நுட்ப ஆர்தர் சி கிளார்க் நிறுவகமானது இலங்கையிடமிருந்து எந்தவொரு நிதி உள்ளீடும் இல்லாமல், அதன் மூலோபாய மற்றும் தொழில்நுட்ப பங்களிப்புகளின் அடிப்படையில் ஒரு கூட்டுப் பங்காளராக திட்டத்தில் இணைந்துள்ளது. விண்வெளிதுறை தொடர்பில் உள்ள சர்வதேச மட்டத்திலான நிறுவனங்களுடன் நிறுவனத்தின் வலுவான உறவுகளின் மூலம் இது சாத்தியப்படக்கூடியதாக இருந்தது.கடந்த ஆண்டுகளில் விண்வெளித் துறையில் தமது திறன் மேம்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு சர்வதேச மன்றங்களில் இந்த நிறுவனம் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது.

1U கனசதுர செயற்கைக்கோளின் பொறியியல் மாதிரியினை வடிவமைத்து பரிசோதிப்பதில் நிறுவனம் ஈடுபட்டமை மற்றொரு நானோ செயற்கைக்கோள் அபிவிருத்தி முயற்சியாகும். இவ்வியலளவு அபிவிருத்திக் கருத்திட்டமானது கணினி பொறியியல், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நானோ செயற்கைக்கோள் துணை அமைப்புகளின் விண்வெளிப் பரிசோதனை மற்றும் உலகளாவிய நானோ செயற்கைக்கோள் துறையில் வளர்ந்து வரும் நானோ செயற்கைக்கோள் தொழிற்துறையில் மின்சாரம், தொடக்க கணினி, தகவல் தொடர்பு போன்ற துணை அமைப்புகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு வழிவகுக்கும்.

நாட்டில் தேயிலை கைத்தொழில் எதிர்கொள்ளும் திறன்மிக்க தொழிலாளர் பற்றாக்குறைக்கு பதிலிறுக்கும் வகையில், இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்ரக் நிறுவனமானது, சாத்தியமான இயந்திரமயமாக்கல் தீர்வொன்றை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட செயற்திட்டமொன்றை ஆரம்பித்தது.. அறுவடை இயந்திரத்தின் இலக்கிடப்பட்ட வினைத்திறனானது, கைமுறையாக பறிப்பதை விட நான்கு மடங்கு அதிகமாகும். மிகவும் வெற்றிகரமான முன்மாதிரிகள் உருவாக்கப்பட்டமையுடன் நடப்பு ஆண்டில் கருத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இம்முன்மாதிரிகள் 70% இற்கும் அதிகமான தேர்ந்தெடுக்கும் வினைதிறன் வீதத்தை

அடைந்துள்ளன. தற்போதைய தயாரிப்பு உருவாக்க முயற்சிகள் தொழில்நுட்பத்தை மேலும் செம்மைப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றன.

மேற்குறித்த முக்கிய கருத்திட்டங்களைத் தவிர, தொழிற்துறையால் ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம் 2022 இல் தொடங்கப்பட்டது அல்லது வழங்கப்பட்டுள்ளது, அவையாவன, இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கான தொழில்நுட்ப ஆதரவு, தேயிலை தோட்டங்களில் காலநிலை மற்றும் மண் ஊட்டச்சத்து கண்காணிப்புக்கான Agri-Cel'l: வாகன மின்கல உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனத்திற்கான தொழிற்சாலை இணக்க பரிசோதனைக்கான ஏற்றுக்கொள்ளல், வளைத்தல் / தக்கவைத்தல் பரிசோதிப்பான்கள் விருத்தி, நோர்டிக் நாடுகளுக்கான (Nordic countries )குற்றங்களுக்கு எதிரான தனிப்பட்ட பாதுகாப்பு.்.எச்சரிக்கை சாதனத்திற்கான பயனர் இடைமுகம் (எச்சரிக்கைப் பொருட்கள்) மற்றும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (பிரைவேட்.) லிமிடெட் நிறுவனத்திற்கான உணரி அடிப்படையிலான தானியக்க நீர் குழாய்களை தானியக்கப்படுத்தல். என்பன அடங்கும்.

பரிசீலனையிற் கொள்ளப்படும் ஆண்டில் தொடங்கப்பட்ட அல்லது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட முக்கிய உள்ளக் ஆராய்ச்சி, வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களில் உள்ளடங்குவன: தொழில்நுட்ப பரிமாற்றம், Xilinx தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேயிலை நிற தரப்படுத்தல் முறையின் சந்தைப்படுத்தல், செயற்கை துளை ரேடார் (SAR) முறைமை, LoRa அடிப்படையிலான தொடர்பூட்டல் வலையமைப்பு, மீண்டும் பயன்படுத்தக்கூடிய கதிர் வழி வான் வெளி அளவமைப்பு (Radiosonde) விருத்தி, திரவ உரங்களினை தெளிக்கும் ட்ரோன் (Drone), VTOL UAV விருத்தி செய்தல் மற்றும் ஆளி தாங்குதிறன் பற்றிய சோதிப்பு கருவி தொடர்பில் சேய்மை உணரி சாராமாறி கண்காணிப்பு, பதிவு செய்தல் மற்றும் அலாரம் அமைப்பு என்பன அடங்கும்.

மேலும், சேவைநாடிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் பல விரிவான ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றகரமான வன்பொருள் மீட்பு சேவைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இலங்கை புகையிரத்தின் வகுப்பு S10 மற்றும் வகுப்பு S12 பவர் வண்டிகளுக்கான 35 சாரதி காட்சிப்படுத்தல் இணைமையம் மீட்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்க பணியொன்றாகும். இதற்கு மேலதிகமாக, நிறுவனமானது வகுப்பு M9 இயக்கவலு இயந்திரங்களின் பழுது கண்டுபிடித்தல் மற்றும் முதன்மை முறைவழியாக்க முறைமைகளை மீட்பதற்கான மேலும் இரண்டு விலைக்கோரல்களை வெற்றிகரமாகப் பெற்றுக்கொண்டது.

நிறுவனத்திற்கு வன்பொருள் மீட்பு தொடர்பில் வேறும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கான PLC அலகுகளை பழுதுபார்த்தல், இலங்கை அணுசக்தி சபைக்கான X- கதிர்வீசு குழாய்களை சரிசெய்தல் மற்றும் INAEL LBS கட்டுப்படுத்திகள், தானியங்கி ஆளி கட்டுப்படுத்திகள் பழுதுபார்த்தல் மற்றும் இலங்கை மின்சார சபைக்கான LBS RTU பலகங்களை சரிசெய்தல் ஆகியவை அடங்கும். இப்பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தமையானது

சேவை நாடிகளின் தேவைகளை பூர்த்திசெய்தமை மாத்திரமின்றி ஒப்பீட்டளவில் அதிக விலையில் இச்சேவைகளை வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு வேண்டிய தேவையை இல்லாது செய்து கணிசமான செலவு மீதப்படுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இச்சாதனைகள் நிறுவனத்தின் நிபுணத்துவம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியைப் பாதுகாத்தல் என்பவற்றில் அதன் பங்களிப்பை எடுத்துக்காட்டுகின்றன.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு, 2022 ஆம் ஆண்டில் பல தகவல் முறைமை அபிவிருத்திக் கருத்திட்டங்களை முன்னெடுத்தது, அதாவது, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் கூட்டிணைந்து Agri-Cell தரவுத்தளத்தை உருவாக்குதல், குறிப்பிட்ட எண்ணிக்கைக்கான தேவைகளுக்கு தொலைபேசி செயலிகளின் அபிவிருத்தி, பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்திற்கான தகவல் தொழில்நுட்ப முகாமைத்து முறைமை (MIS) பாடத்தொகுதி, நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக வலைத்தள இடைமுக அபிவிருத்தி ஆதரவு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி சேவைநாடிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான தகவல் முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு உதவி என்பன அமைந்திருந்தன.

நிறுவனத்தின் வானியல் பிரிவு, யுனான் வானியல் ஆய்வக சைனா நிறுவனத்துடன் இணைந்து பேரழிவு மாறிலி உடுக்கள் பற்றிய சர்வதேச ஒத்துழைப்பு ஆராய்ச்சி வானியல் நிறமாலைக்காட்டிக்கான ஆராய்ச்சிக்காக புதிய எச்செல்லே நிறமாலைவரைவியினை நிறுவுதல், இலங்கைக்கான சூரிய அளவுரு கணிப்பான் அமைத்தல் உள்ளடங்கலாக முக்கிய ஆராய்ச்சி, உட்கட்டமைப்பு மற்றும் வேறு தொடர்புடைய பிரயோக அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடத்தியது.

இதற்கு மேலதிகமாக, விண்வெளி தொழில்நுட்ப பிரயோகம், புவியியல் தகவல் முறைமை மற்றும் தொலைநிலை உணர்தல், அதாவது திறந்த அணுகல் செய்மதியைக் கொண்டு இலங்கையில் காடுகளின் அழிவைக் கண்காணித்தல் மற்றும் அளவிடுதல், அம்பாறை மாவட்டத்தில் மழைநீர் மூலம் ஆழமான நீர்நிலை நிரம்பும் பிரதேசங்களை அடையாளம் காண்பதற்கான விண்வெளி தொழில்நுட்பம் அடிப்படையிலான அணுகுமுறை மற்றும் மின்சார விநியோக வலையமைப்பின் புவியியல்சார் இட மாதிரி ஆகிய துறைகளில் பின்வரும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் பாதகமான பொருளாதார நிலைமை மற்றும் தொற்றுநோய்த் தாக்கம் என்பவற்றுக்கு மத்தியில், கடுமையான அலுவலர் பற்றாக்குறை உள்ளடங்கலாக பல எண்ணிக்கையிலான தடைகளை எதிர்கொண்டமையினையும் பொருட்படுத்தாது தொழிற்துறை சேவைகளுக்கான கேள்வியுடன் இணங்கியொழுகும் பொருட்டு நிறுவனம் அதன் சேவைகளை தொழில்துறை சேவைநாடிகளுக்கு தொடர்ந்து வழங்குவதற்கு இயலுமாகவிருந்தது. இலத்திரனியல் மற்றும் மின்சார பரிசோதனை மற்றும் அளவீட்டு கருவிகளின் அளவுத்திருத்தம், பல்வேறு வகையான இலத்திரனியல் உபகரணங்களின் பாகங்களின் மற்றும் தொகுதிகளின் செயலாற்றுப் பரிசோதனை, ஈய அமில பட்டரிகள் மற்றும் திடீர் எழுச்சி பாதுகாப்பு சாதனங்களின் பரிசோதனை, அதேபோன்று தொடர்பாடல் மற்றும் ஒலிபரப்புச் சேவைகள் போன்ற துறைகளுக்கான அளவீட்டுச் சேவைகள் போன்ற சேவைகளை வழங்கியது. 2022 இல், நிறுவனம் மொத்தமாக 105 செயலாற்றுப் பரிசோதனை அறிக்கைகளையும் 148 அளவுத்திருத்த அறிக்கைகளையும் வழங்கியது. மேலும், நிறுவனம் கணிசமான எண்ணிக்கையிலான ஆலோசனைத் கருத்திட்டங்களையும் முன்னேகரமான வன்பொருள் மீட்புப் பணிகளையும் வெற்றிகரமாகக் கையாண்டது. மின்னல் பாதுகாப்புத் துறையில், முதன்மையாக அரசாங்க சேவைநாடிகளுக்காக தள ஆய்வுகள், முறைமை வடிவமைப்பு, விலைக்கோரல் ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் நிறுவல்களின் சான்றுப்படுத்தல் என்பவற்றை ஈடுபடுத்துகின்ற பல தொழில்நுட்ப ஆலோசனைகளை நிறுவனம் வெற்றிகரமாக வழங்கியது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் முதன்மையாக அநேகமான பொறியியல் மற்றும் விஞ்ஞான அரச நிறுவனங்கள் பொதுவாக எதிர்கொள்ளும் ஊதியம், நடைமுறைசார்ந்த இணங்குவித்தல், நிர்வாகம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் விவகாரங்கள் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக முக்கிய தொழில்நுட்ப ஊழியர்களை ஆட்சேரத்தல் மற்றும் தக்கவைத்துக்கொள்வதில் தொடர்ச்சியான சவால்களை எதிர்கொண்ட போதிலும், நிறுவனமானது மேலே குறிப்பிட்ட விரும்பப்பட்ட செயலாற்றத்தினை வெற்றிகரமாக அடைந்தது.

**எந்திரி.(கலாநிதி) சனத் பனாவென்னகே**
**புணிப்பாளர் நாயகமும் பிரதம நிறைவேற்று அலுவலரும்**
**(பதவி வழி உறுப்பினர், ஆளுநர் சபை)**

## 4.0 நிறுவகத்தின் பிரிவுகள்

- மின்னணுவியல் மற்றும் நுண் மின்னணுவியல் பிரிவு
- தொடர்பாடல் மற்றும் மனித எந்திரவியல் பிரிவு
- கைத்தொழில் சேவைகள் பிரிவு
- விண்வெளி தொழில்நுட்ப பிரயோகம்/விண்வெளி தொழில்நுட்பம்/ வானியலாராய்ச்சி பிரிவு
- தகவல் தொழில்நுட்ப பிரிவு
- நிர்வாகம், நிதி மற்றும் மனிதவள பிரிவு

## 5.0 பிரதான கருத்திட்டங்களின் செயலாற்றுகை சிறப்பம்சங்கள்

### தேர்ந்தெடுக்கப்பட்ட தேயிலை அறுவடை இயந்திரம்

சீனா, இந்தியா மற்றும் கென்யாவைத் தொடர்ந்து உலகளவில் நான்காவதாக உயர்ந்த அளவில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றுள்ளது. சீனா 2.2 பில்லியன் கிலோவுக்கும் அதிகமான உற்பத்தியுடன் முன்னணியில் உள்ள அதே வேளையில், இந்தியா கிட்டத்தட்ட 1.2 பில்லியன் தேயிலையினை உற்பத்தி செய்கின்றது.அதுபோன்று கென்யா 400 மில்லியன் கிலோ தேயிலையினை உற்பத்தி செய்யும் அதே வேளையில், 290 முதல் 300 மில்லியன் கிலோகிராம் வரையிலான வருடாந்த தேயிலை ஏற்றுமதியின் மூலம், இலங்கை, உலகளாவிய தேயிலை சந்தையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

எவ்வாறாயினும், இலங்கை தேயிலை தொழிற்துறையானது அது நீடித்து நிலைத்து நிற்பதற்காக உயர் சவால்களை எதிர்கொள்கிறது, இதன் அடிப்படையில் நோக்குமிடத்து அதனது முதன்மையான சவாலானது, தேயிலையில் கொழுந்து பறிக்கும் பகுதியில், திறமையான தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் தொழிலாளர் கட்டணங்கள் ஆகும். இதற்கு ஒரு தீர்வு என்ற வகையில் இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிறுவனமானது, தேயிலை பறிப்பிற்கான தீர்வாக குறைந்த தொழிலாளர்களின் உதவியுடன் இயந்திரமயமாக்கலின் திறனை அங்கீகரித்துள்ளது. இதன் மூலம் செயல்பாட்டில் சிறந்த தெரிவினை உறுதி செய்து கொள்ளலாம்.

அக மற்றும் சர்வதேச பங்கேற்பாளர்களை உள்ளடக்கியதும் அத்துடன் போட்டித்தன்மையுடன் கூடியதுமான ஆர்வத்தை வெளிப்படுத்தும் (EOI) செயல்முறையின் மூலம், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவானது, தேயிலை அறுவடை இயந்திரமயமாக்கல் திட்டத்திற்காக நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தினை தெரிவு செய்துள்ளது. இந்த இயந்திர வடிவமைப்பின் நோக்கானது, முதிர்ந்த தேயிலை இலைகள் மற்றும் தண்டுகளை (அரிம்பு என அழைக்கப்படும்) விட்டுவிட்டு, இளம் தேயிலைகளை (இரண்டு அல்லது மூன்று இலைகள் கொண்ட ஒரு மொட்டு அல்லது மென்மையான தளிர்கள் போன்றவை) பறிக்கும் திறன் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தேயிலை அறுவடை இயந்திரத்தை வடிவமைப்பதே ஆகும்.அறுவடை இயந்திரத்தின் பயன்பாட்டின் மூலம் , முதல் தேயிலையினது இலை முளைகளை சேதப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், இரண்டாம் நிலை வளர்ச்சியை பாதுகாக்கலாம். கைமுறையாக பறிக்கப்படும், தேயிலை இலைகளின் புத்துணர்ச்சியை விட அதிக புத்துணர்ச்சியுடன் நான்கு மடங்கு அதிக தேயிலை பறிக்கப்படலே இந்த இயந்திர வடிவமைப்பின் நோக்காகும். முன்மொழியப்பட்ட வடிவமைப்பானது. இயந்திரத் தேர்வு, ஈரப்பதத்திற்கு ஏற்ற நிலை, கள நம்பகத்தன்மை மற்றும் பயனர்- நட்பு செயல்பாடு போன்ற நன்மைகளை உன்னடக்கியதாகும். இந்த இயந்திரம் ஒற்றை நபர் பாவிப்பிற்கு ஏற்ற வகையில் மிகக் குறைந்த நிறை உடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் மின்கலங்களினை பயன்படுத்துவதன் மூலம் மிக நீண்ட நேரம் பயன்படுத்த இயலும் என்பதுடன் இந்த இயந்திரமானது கைகளினால் பறிப்பதனை விட நான்கு மடங்கு அதிக பயனை தரக்கூடியது.

இந்த திட்டத்தின் முதலாவது மூலவகை மாதியானது, பூர்வாங்க கள சோதனைகளில் பயன்படுத்தப்பட்டு திருப்திகரமான முடிவுகளுடன் நடப்பு ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது,. களச் சோதனைகளின் தரவு மற்றும் அவதானிப்புகளின் அடிப்படையில், அபிவிருத்திகள் செய்யப்பட்டன, இதன் விளைவாக 70% அதிகமாக தேர்ந்தெடுக்கும் திறனை கொண்ட இரண்டாவது மூலகைமாதிரி மிகவும் வெற்றிகரமானதாக அமைந்தது. இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் (TRISL) திட்டத்தின் முன்னேற்றம் குறித்து தனது திருப்தியினை வெளிப்படுத்தியது இந்த விடயம் தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கை

எனும் போது அதற்குள்,தயாரிப்புக்கான காப்புரிமையைப் பெறுவதும், ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்ட களச் சோதனைக் காலத்திற்கு நான்கு அலகுகளை உருவாக்குவதும் உள்ளடங்கும்.





**KITSUNE உடன் நெனோ செயற்கைக்கோள் (6U) விருத்தி மற்றும் திறன் மேம்பாடு**

ஜப்பானில் உள்ள கியூ" இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி எனும் நிறுவனத்துடனான கூட்டுத் திட்டமானது தொடரப்பட்டதுடன், அதனைத்தொடர்ந்து, KITSUNE என்ற புதிய நெனோ செயற்கைக்கோளின் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் ஏவுதல் ஆகிய செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தன. விண்வெளி தொழில்நுட்பத்தில் பொறியியலாளர்களின் திறனை மேலும் அதிகரிக்கச் செய்வதனையும் இலக்காக இந்த கருத்திட்டம் கொண்டுள்ளது.

Kitsune 6-அலகு நெனோ செயற்கைக்கோள், மார்ச் 24, 2022 அன்று வெற்றிகரமாக ஏவப்பட்டது. இது 5m தெளிவுத்திறனுடன் பூமி கண்காணிப்பு, செயற்கைக்கோள் அடிப்படையிலான IOT, அயனோஸ்பியர்

உணர்திறன், அதிவேக தொடர்பு மற்றும் தரப்படுத்தப்பட்ட கனசதுர செயற்கை கோள் ஆகிய ஐந்து அம்சங்களினை கொண்டது. தனது ஐந்து அம்சங்களினை சிறப்பாக கொண்ட நெனோ செயற்கைக்கோள் திட்டத்தின் பங்குதாரர்கள் கியூ இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (கியூடெக்), நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், ஹராடா சீகி இன்க். அட்னிக்ஸ் இன்க். (ஜப்பானிலிருந்து இரண்டு தொழில்துறை பங்குதாரர்கள்) மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் ஆகியனவாகும்.







**1 U கனசதுர செயற்கைக்கோளின் பொறியியல் மாதிரியை வடிவமைத்து சோதனை செய்தல்**

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க்கின் எந்திரிகள், கனசதுர செயற்கை கோளின் மின்னணுக் கூறுகளின் மட்டத்திலிருந்து தொடங்கி, அதனுடன் தொடர்புடைய துணை அமைப்புகளைச் ஒருங்கிணைக்கும் வரையில், செயற்கைக்கோள்களை வடிவமைத்து மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். இந்த திட்டத்தின் போது, ஒரு கனசதுர செயற்கைக்கோளின் பொறியியல் மாதிரி நிறைவு செய்யப்பட்டது. மேலும் இது நிலையான சோதனைகள் மற்றும் எதிர்கால ஏவுதல் பணிகளுக்கு

ஒரு முக்கியமான கருவியாக செயல்படும். இந்த செயற்பாடு, பல குறிப்பிடத்தக்க சாதனைகளை முன்னிறுத்துவதற்கு ஏதுவானதாக உள்ளது, அவற்றில் பின்வருவன அடங்கும்.



- திறன் மேம்பாட்டு முயற்சி ஒரு கனசதுர செயற்கை கோளின் அறிமுகம்.
- திட்ட முகாமைத்துவம் மற்றும் குழு வேலைகளில் அனுபவ அறிவினை பெறல்.
- கணனி எந்திரவியலில் அனுபவ அறிவினை பெறல்.
- வளர்ந்து வரும் நெனோ செயற்கைக்கோள் தொழிற்துறைக்கு துணை அமைப்புகளை வழங்குவதற்கான சாத்தியம் (உதாரணம். ஆற்றல் முறைமை, ஊர்தியமை கணனி, தொடர்பாடல் முறைமை)
- இலங்கையில் தயாரிக்கப்பட்ட நெனோ செயற்கைக்கோள் துணை அமைப்புகளின் விண்வெளி சோதனை

**திறந்த அணுகல் செயற்கைக்கோள் மூலம் இலங்கையில் வனச் அழிவினை கண்காணித்தல் மற்றும் அளவிடுதல்**




சுற்றுச்சூழல் அமைப்புகளில் வனப்பகுதி முக்கிய பங்கு வகிக்கிறது, ஆனால் காடழிப்பு மற்றும் வனத்தினை அழித்தல் என்பது உலகளவில் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது இவற்றில், வன அழிவினை கண்காணித்தல் ஒரு சவாலுக்கான விடயமாகும்.ஏனெனில் வன அழிவானது படிப்படியாக நிகழும் போது அது வன நிலத்தினை பயன்படுத்துதல் எனும் தோற்றப்பாட்டினை தரும். மார்ச் 2022 இல், இலங்கையின் வனப் பாதுகாப்புத் திணைக்களமானது தொலைநிலை உணர்திறன் அடிப்படையில் "காடு சிதைவு சுட்டெண்" ஒன்றை உருவாக்குமாறு கோரியது. தற்போது, நாட்டிலுள்ள காடுகளின் அழிவின் அளவை மதிப்பிடுவதற்கான முறை ஒன்று திணைக்களத்திடம் இல்லை. காடுகளின் அழிவின் அளவைப் பற்றிய தகவல்களைக் பேணுதலானது, சிதைந்த காடுகளை மீட்டெடுப்பதற்கும், சேதமடைந்த வன நிலங்களை மறுசீரமைப்பதற்கும் அதனை பற்றிய கொள்கைகளை வகுப்பதற்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் முக்கியமானது ஆகும். காடுகளின் நிலையைக் கண்டறிவதும் மதிப்பிடுவதும் சிக்கலானது, ஏனெனில் அழிவு எனும் நிலை என்பதில் ஒவ்வொருவரும் மாறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளனர்.

காடுகளின் சிதைவுகளினை மதிப்பிடுதல் என்ற விடயம் தொடர்பில் நோக்கினால், கள அடிப்படையிலான தரவு சேகரிப்பு முறைகளுடன் ஒப்பிடுகையில், செயற்கைக்கோள் பட அடிப்படையிலான கண்காணிப்பு முறைகள் நேரம் மற்றும் உழைப்பு என்ற அடிப்படையில் மிகவும் திறமையானவை ஆகும். 2022 இல் தொடங்கப்பட்ட இந்த திட்டம் 2023 இல் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் காடுகளின் அழிவை பாதிக்கும் பல்வேறு காரணிகளின் படங்களை உருவாக்க மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. வனப் பாதுகாப்புத் துறையுடன் ஒருங்கிணைந்த வனச் அழிவு குறியீட்டு வரைபடம் அளவீடு செய்யப்பட்டு சரிபார்க்கப்படும்.

# 6.0 ஆராய்ச்சி நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் சேவைகள்

## 6.1 எந்திரவியல் மற்றும் தகவல் மற்றும் தொழில்நுட்பத்தில் தொழிற்துறையினை அடிப்படையாக கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்திற்கு தொழில்நுட்பவியல் ஆதரவு: தேயிலை தோட்டத்துறையில் காலநிலை மற்றும் மண் போசணையினை கண்காணிப்பதற்கு விவசாயத்தளம்**

தேயிலை விவசாயத்தில் துல்லியமான விவசாய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் தொடர்பில் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தினது விவசாயத்தளத்திற்கு ஆதரவளிக்கவும் மற்றும் இந்த துறையினை விருத்தி செய்வதற்கு ஏற்ப உயர் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகரிக்க செய்வதற்கும் ஒரு முயற்சி தொடங்கப்பட்டது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் மண்ணின் தரம் உள்ளிட்ட சுற்றுச்சூழல் தரவுகளின் அடிப்படையில் விவசாயிகள் சமூகங்களுக்கு தொழில்நுட்ப ரீதியில் (decision support systems) ஆதரவுகளினை வழங்குவதற்காக நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளாக்கினால் உருவாக்கப்பட்ட IoT (இணையப்பொருட்கள்) தயாரிப்புகள் பயன்படுத்தப்படலினை இந்த முயற்சி உள்ளடக்கியதாக அமைகிறது. இம்முயற்சியின் ஊடாக பெறக்கூடிய பிரதான பயன்கள், பயிர்களுக்கான நீர்ப்பாசனத் தேவைகள் மற்றும் பசளை பயன்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். இலங்கை ஒரு பசளை இறக்குமதியாளராக இருப்பதால், பசளையினை வினைத்திறனுடன் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானது. சேதன பயிர்செய்கையின் தற்போதைய போக்கில், நைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்ற மண்ணின் முதன்மை ஊட்டச்சத்துக்களின் துல்லியமான அளவீடுகள் அவசியமாகும்.˙. உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கும், உற்பத்திச் செலவுகள் மற்றும் தேயிலை விவசாயத்தில் கரியமில தட அளவினை குறைப்பதற்கும் பசளைகளினை பயன்படுத்துவதற்கு முன்னும் பின்னும் அளவீடுகள் எடுக்கப்படுகின்றன. நிபுணர்கள் பரிந்துரைத்தபடி இந்த அணுகுமுறை சிறந்த உலகளாவிய விவசாய நடைமுறைகளுக்கும் இணங்குகிறது.

விவசாயத்துடன் தொடர்பான தோட்ட கண்காணிப்பு தயாரிப்புகளை உருவாக்குவதில் சிறந்தொரு வெற்றியினை நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் கொண்டுள்ளது. இந்த தயாரிப்புகள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் தற்போது தேயிலை விவசாய சமூகத்தின் நலனுக்காக செயலாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகள் எனும்போது அதற்குள், மிகச்சரியான காலநிலை நிலைய தரவுகளிலிருந்தான காலநிலை தரவுகள் மற்றும் விவசாய வானிலை தொடர்பான பிற மண் அளவுரு தரவுகள் ஆகியன அடங்கும்.

இந்த முயற்சியானது புதிய தயாரிப்புக்கள் விருத்தி செய்யப்படவேண்டியதன் அவசியத்தை அடையாளம் கண்டுள்ளது, குறிப்பாக தேயிலை தோட்டங்களில் பசளையினை பயன்படுத்துவதற்கு மண் ஊட்டச்சத்து கொண்டதா என அடையாளம் காணும் நிகழ்வினை கூறலாம்.தற்போது, களப் பயன்பாட்டிற்கு ஏற்ற, குறுகிய காலத்தில் துல்லியமான சோதனை முடிவுகளை வழங்கக்கூடிய, உபகரணங்கள் எளிதில் கிடைக்கக்கூடியதாக இல்லை. தற்போதுள்ள நடைமுறைகள்,அதிக உழைப்பு தேவைப்படும் ஒன்றாக இருப்பதுடன் நிபுணத்துவ திறன்களைக் கொண்ட இரசாயன ஆய்வகங்கள் இதற்கு தேவைப்படுகின்றன.

  

இந்த முயற்சியின் சமூக-பொருளாதார தாக்கம் குறிப்பிடத்தக்கது, ஏனெனில் இது கரிம உரங்கள் மற்றும் பிற ஊட்டச்சத்து உள்ளடக்கங்களை சோதிக்க அனுமதிக்கிறது. விவசாயிகள் இப்போது தங்கள் பயிர்களின் ஊட்டச்சத்துத் தேவைகளைக் கண்டறிந்து அதற்கேற்ப பரிந்துரைகளைப் பெற கள மாதிரிப் பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

சகலவற்றினையும் உள்ளடக்கிய வகையில் நோக்கினால், தேயிலை விவசாயத்தில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் துல்லியமான விவசாய முறைகளினை பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் தரமானது மேம்படுவது மட்டுமல்லாமல், அது நிலையான நடைமுறைகளுக்கு பங்களிக்கிறது. அத்துடன் சுற்றுச்சூழல் தாக்கமானது, குறைவதுடன் இலங்கையில் தேயிலை விவசாய சமூகத்தின் நல்வாழ்வு மேம்படுகிறது.

**IOT (இணையப்பொருட்களின்) அடிப்படையில் நீர் நிலை கண்காணிப்பு நிலையங்கள்**

நில்வல கங்கையின் ஈர்ப்பு புள்ளிகளில் கணினி முகாமைத்துவத்தின் நிமித்தம் நிகழ்நேரத்தில் தொலைநிலை கண்காணிப்பு மற்றும் நீர் நிலைகளை பதிவுசெய்வதற்காக நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க்கினால் உருவாக்கப்பட்ட தயாரிப்புகள் வெற்றிகரமாக வேறொரு இடத்திற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ஆறுகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர் தாங்கிகள் போன்ற பல்வேறு நீர்நிலைகளில் உள்ள நீரின் அளவைக் கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தனித்து இயங்கக்கூடிய கரடுமுரடான தயாரிப்புகளை உருவாக்குவது இந்த விருத்திகளுக்குள் உள்ளடங்கும்.

 


அபிவிருத்தி செய்யப்படும் தயாரிப்புக்களாவன நீர் நிலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும், கையடக்க தொலைபேசி மற்றும் கணிணிகளில் அத்தரவுகளினை எளிதாக அணுகவும் மற்றும் காட்டக்கூடிய வகையில் நிகழ்நேர தரவை வழங்கவும் அனுமதிக்கின்றன. இது பயனர்கள் நீர் நிலைகள் பற்றிய முக்கியமான தகவல்களை உடனடியாக பெற்றுகொள்ள உதவுவதால் சரியான நேரத்தில் சரியான தீர்மானம் எடுக்கப்படுவதற்கு உதவுகிறது. முடிவெடுப்பதை எளிதாக்குகிறது. மேலும், சிக்கலான சூழ்நிலைகளினை பயனர்களுக்கு தெரிவித்து உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு ஏற்ப எச்சரிக்கை வழிமுறைகளுடன் கணினி பொருத்தப்பட்டுள்ளது.

இந்த தயாரிப்புக்களின் கரடுமுரடான வடிவமைப்பானது, வெளிப்புற சூழல்களுக்கு அவற்றின் பொருத்தப்பாட்டினையும் நீடித்து நிலைத்துள்ள தன்மையினையும் உறுதிசெய்கிறது என்பதுடன் இது வெவ்வேறு இடங்களில் நீர் நிலைகளை கண்காணிப்பதற்கான நம்பகமான கருவிகள் என்ற கருத்தினை

தருகிறது. இந்த தயாரிப்புகளை புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்துவது பயனுள்ள நீர் மேலாண்மை மற்றும் வள கண்காணிப்பு தீர்வுகளை வழங்குவதில் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க்கினது

அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது. பொதுவாக, நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க்கினால் உருவாக்கப்பட்ட முழுமையான கரடுமுரடான தயாரிப்புகள், உண்மையான நேரத்தில் நீர் நிலைகளைக் கண்காணிக்க ஒரு நடைமுறை மற்றும் திறமையான வழியை வழங்குகின்றன. இது நீர் வளங்களை சிறந்த முறையில் நிர்வகிக்க உதவுகிறது மற்றும் பல்வேறு இடங்களில் நீர் அமைப்புகள் தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறைகளுக்கு உதவுகிறது.

**அதி நவீன அமைப்புகளினை ஆழமான கண்டறிதல் மற்றும் உயர் வன்பொருள் மீட்பு**

இந்தச் செயற்பாட்டின் மூலம், மிகவும் சிறப்பாக செயற்படக்கூடிய நுண்செயலி அமைப்புகளுடன் கூடிய பழுதடைந்த மிகவும் மதிப்புமிக்க இறக்குமதி செய்யப்பட்ட அமைப்புகளை மீளப் பயன்படுத்தக்கூடியதாக, இருப்பதுடன் வருடாந்தம் நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியின் அளவினையும் சேமிப்பதுடன், இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான எந்திரங்களின் செயலுறு நேரத்தினை அதிகப்படுத்துகிறது. .சம்பந்தப்பட்ட அமைப்புகளின் வன்பொருள் மற்றும் நிலைப்பொருள் தொகுதிகளில் தொழில்நுட்ப ஆவணங்கள் இல்லாத நிலையில், நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் தொழில்நுட்ப வல்லுனர்களால் விரிவான மறுவலமான பொறியியல் முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மீட்பு செயல்முறை செய்யப்படுகிறது.

2023 ஆம் ஆண்டிற்கான பிரதான வாடிக்கையாளராக இலங்கை புகையிரத திணைக்களம் இருந்ததுடன் மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகமானது வகுப்பு S10 மற்றும் Class S12 பவர் கோச்சுகளின் 35 சாரதி காட்சி பலகங்களினை மீட்டெடுத்துள்ளது. மேலும், கிளாஸ் M9 பொறிகளின் இழுவைக் கட்டுப்பாட்டு அலகுகள் மற்றும் முதன்மை செயலி அமைப்புகளை மீட்டெடுத்தல் தொடர்பில் மேலும் இரண்டு விலை மனுக்களினை பெறுவதில் நிறுவனம் வெற்றியினை கண்டுள்ளது.








**தன்னியக்க மின்கல உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனத்திற்கான தொழிற்சாலை இணக்க சோதனை தொடர்பில் ஏற்பு மற்றும் வளைப்பு/ தக்கவைப்பு சோதிப்பிகளினை விருத்தி செய்தல்**

உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகள் இரண்டிற்கும் மின் கலங்களினை உற்பத்தி செய்து வழங்கும் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி நிறுவனமான வரையறுக்கப்பட்ட லீடர் பேட்டரி மனுபாக்சரிங் (தனியார்) நிறுவனத்திற்கு தொழிற்சாலை இணக்க சோதனைக்கான ஏற்பு மற்றும் வளைப்பு / தக்கவைப்பு என்ற இரண்டு சோதிப்பிக்களினை வடிவமைத்து உருவாக்குவதே இந்த கருத்திட்டத்தின் நோக்காகும்.

ISO9001:2008 தரநிலைகளுக்கு இணங்க, மின்கல உற்பத்திக்கான மிகவும் நவீன தொழில்நுட்பத்தைக்

கொண்ட ஒரு முழு தானியங்கு ஆலையை நிறுவனம் இயக்குகிறது. விவரக்குறிப்புகளின் தயாரிப்பு பூரணப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து கணினி மேம்பாடு ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய விவரக்குறிப்புக்களினை சம்பந்தப்படுத்துவதன் மூலம், நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகமானது தேவைக்கு ஏற்ப உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உத்தரவாதமான நீண்ட கால, சரியான நேரத்தில் பராமரிப்பு ஆதரவுடன் மலிவு விலையில் தீர்வுகளை வழங்குவதன் மூலம், கணினி மாற்றங்கள் தொடர்பில் தனது சேவையினை வழங்கி தொடர்ந்து உதவுகிறது.





**ஐரோப்பிய நாடுகளில் நிலவும் குற்றங்களுக்கு எதிராக தனிப்பட்ட பாதுகாப்பு பயனர் இடைமுகம் ∴அலாரம் சாதனம் (யுடயசஅறநயச)**

ஸ்காண்டிநேவிய நாடுகளை இலக்காகக் கொண்டு வெளிப்புற சூழலில் பெண்கள் பயன்படுத்தவதற்கு ஏற்ற வகையில் குற்றத் தடுப்புக்கான தயாரிப்பான ”அலாரம் சாதனம்’’ ஒன்றினது வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டை ˙, நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகமானது ஏற்கனவே நிறைவு செய்துள்ளது.இந்த திட்டத்தின் உள்ளூர் பங்குதாரர் வரையறுக்கப்பட்ட வுழுளு லங்கா (தனியார் )நிறுவகம் ஆகும். மேலும் இது ஒரு வெளிநாட்டு நிறுவனமான யுடயசஅறநயச ளுறநனநெ யுடி உடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. உற்பத்தியானது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது, அதாவது டுநுனு படியுடன் கூடிய இடுப்புப் பட்டை, கையால் பிடிக்ககூடிய அலாரம் மற்றும் ஒரு ஸ்மார்ட்போன் ஆகியன ஆகும்.

வுழுளு லங்காவின் புதிய தேவையாக முன் வைக்கப்பட்ட ஒரு கோரிக்கையானது, டுநுனு பட்டியின் அளவுருக்களை சரிசெய்வதற்கு அலாரம் சாதனம் அலகுக்கான பயனர் இடைமுகத்தை உருவாக்குவதாகும்.







புதிய பணி தொடர்பான பெரும்பாலான பணிகள் நிறைவடைந்துள்ளன, மேலும் மேம்பாடுகளை இறுதி செய்து கணினியில் ஒருங்கிணைக்க வாடிக்கையாளரின் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**உணரியினை அடிப்படையாக கொண்ட தன்னியக்க நீர் குழாய்**

இந்த திட்டத்தின் நோக்கமானது ஒரு சாதாரண தண்ணீர் குழாயை உணரியினால் இயக்கப்படும் அமைப்பிற்கு மாற்றுவதற்கான ஒரு புதுமையான தொழில்நுட்ப தீர்வை வடிவமைத்து உருவாக்குவதாகும். வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான போக்குவரத்து நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. 05 மாதிரி அலகுகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு வாடிக்கையாளரிடம் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. முன்னெடுக்கப்பட்ட இந்த அக விருத்தியானது ,வாடிக்கையாளருக்கு கணினி மாற்றங்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய செலவைச் சேமிக்கவும், புகழ்பெற்ற உள்ளூர் நிறுவனத்திலிருந்து எதுவித சிக்கல்களும் இல்லாது பராமரிப்பு ஆதரவைப் பெறவும் உதவும்




## 6.2. எந்திரவியல் / தகவல் தொழில்நுட்ப துறையில் அக ஆராய்ச்சி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

**தொழில்நுட்ப பரிமாற்றம், தலையின் நிறத்தினை கணிக்கும் முறையினை சந்தைப்படுத்தல் - Xilinx தொழில்நுட்பம்**

தேயிலை தொழிற்சாலைகளில் இருந்து பெறப்பட்ட தேயிலை மாதிரிகள் மூலம் இந்த இயந்திரம் ஆய்வகூட சூழலில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.அத்துடன் அக தொழில்நுட்ப பரிமாற்றமனது திட்டக்குழுவால் வெற்றிகரமாக கையாளப்பட்டது. மேலும் திட்ட ஆவணங்கள் ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்டுள்ளன. சாத்தியம் மிக்கதொரு கூட்டிணைவாளர் ஒருவர் மூலம் இந்த வளர்ச்சியை வணிகரீதியாக ஆராய்வதற்கும் அதே நேரத்தில் பயனர் சமூகத்திற்க்கு அறிமுகப்படுத்துவதற்கும் செயல்பாட்டிற்காகவும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவக வளாகத்தில் இந்த அமைப்பு நிறுவப்படும்.





**செயற்கை துளை ரேடார்; (SAR) அமைப்பு**

SAR என்பது ஒரு சக்திவாய்ந்த நுண்ணலை தொலை உணரி நுட்பமாகும், இது ஒரு நிலப்பரப்பைப் போலவே, வானிலை மற்றும் சூரிய ஒளி வெளிச்சம் போன்றவற்றின் உயர்-தெளிவுத்திறன் கொண்ட இரண்டு

அல்லது முப்பரிமாண பிரதிநிதித்துவங்களை உருவாக்கப் பயன்படுகிறது. இத்திட்டமானது ஒரு அறிவாற்றல் மூலப் பயிற்சியாகத் தொடங்கப்பட்டது, பின் அதைத் தொடர்ந்து தொழில்நுட்பக் கண்காட்சியும் நடத்தப்பட்டது.

## LoRa - இணை அடிப்படையாக கொண்ட தொடர்பாடல் வலையமைப்பு

இலங்கை மின்சார சபை (CEB) பேராதனைப் பல்கலைக்கழகம் (UOP), மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் ஆகிய மூன்று பங்காளர்களுக்கு இடையேயானது இந்த திட்டமானது, இலங்கை மின்சார சபைக்காக உயர் மின்னழுத்த பரிமாற்ற பாதை நிலைமைகளை தொலைவிலிருந்து கண்காணிக்கும் தேவையை பூர்த்தி செய்வதாகும்.

இத்திட்டத்தின் நோக்கமானது மின் விநியோக அமைப்புகளை மிகவும் திறமையாக கண்காணிக்கவும், மேம்படுத்தவும் மற்றும் பராமரிக்கவும் தந்தியில்லா தரவு முறையில் வலையமைப்பினை செயல்படுத்துவதாகும். விநியோக அமைப்பிலிருந்து எடுக்கப்பட்ட தரவை கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்ப LoRa (குறைந்த சக்தி நீண்ட தூரம்) அடிப்படையிலான தொடர்பு வலையமைப்பிற்கு பயன்படுத்தப்படும். தரவானது செயலாக்கம் மற்றும் பகுப்பாய்வுக்கு உட்பட்ட பிறகு, தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்குரித்தான சேவை மையங்களை அடையாளம் காண தொடர்புடைய தகவல்களாவன முன்வைக்கப்படும்.





முன்மொழியப்பட்ட திட்டத்தின் விளைவளவுகள் பின்வருமாறு.

- மின் விநியோக அமைப்பில் குறைந்த கிரயம் மற்றும் நிகழ் நேர கண்காணிப்பு (தொழிற்பாட்டு செலவினம் இல்லை)
- தவறுகள் உள்ள இடங்களைக் கண்டறிந்து, அவற்றை சேவை மையங்களுக்கு அனுப்பல், இது நேர-திறத்திற்கு ஏதுவாகும்.
- மின் விநியோக முறையை மேம்படுத்த, நிர்வகிக்க மற்றும் பராமரிக்க தரவைப் பயன்படுத்தல்
- மின் விநியோக அமைப்பு மேம்படுத்தல்
- எதிர்கால திட்டமிடலுக்கு தரவைப் பயன்படுத்தள்
- தொலைவிலிருந்து பராமரித்தல் சாத்தியப்படுமா என்பதனை பகுப்பாய்வு செய்தல்

தற்போது, திட்டத்தின் கருதுகோள் கட்டத்தின் ஆதாரமானது வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

**மீண்டும் பயன்படுத்தக்கூடிய கதிர் வழி வான் வெளி அளவமைப்பு (Radiosonde) விருத்தி**



கதிர் வழி வான் வெளி அமைப்பு என்பது மின்கலத்தினால இயங்கும் தொலையளவியல் கருவிகள். இவை பொதுவாக வானிலை பலூன்கள் மூலம் வளிமண்டலத்திற்கு கொண்டு செல்ல வடிவமைக்கப்பட்டவை ஆகும். உயரம், அழுத்தம், வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம் மற்றும் திசை மற்றும் அதிக உயரத்தில் உள்ள காஸ்மிக் கதிர் அளவீடுகள் உட்பட பல்வேறு அளவுருக்களை அளவிட அவை பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது, வானிலை ஆய்வுத் திணைக்களமானது வானிலை முன்னறிவிப்புகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட கதிர் வழி வான் வெளியை பெரிதும் நம்பியுள்ளது. அக ரீதியாக விருத்தி செய்யப்பட்டவற்றினை விட இவற்றின் செலவினம் மிக அதிகமாகும்.

இந்த நிலைமையானது கதிர் வழி வான் வெளியின் அக மட்டத்திலான அபிவிருத்திக்கு உயரிய வாய்ப்பை வழங்குகிறது. உள்நாட்டில் கதிர் வழி வான் வெளியை உருவாக்குவதற்கும் தயாரிப்பதற்கும் அக மட்டத்தில் திறன்களை நிறுவுவதன் மூலம், வானிலை ஆய்வுத் துறை மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்கள் கிரய சேமிப்பு மற்றும் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப கருவிகளைத் தனிப்பயனாக்குவதற்கான நெகிழ்வுத்தன்மை ஆகியவை தொடர்பில் பயனடையலாம்.

மேலும், கதிர் வழி வான் வெளியின் அக மட்டத்திலான வளர்ச்சியானது தொழில்நுட்ப பரிமாற்றம், அறிவு மேம்பாடு மற்றும் நாட்டிற்குள் திறன் மேம்பாட்டிற்கு பங்களிக்கும். வளிமண்டல அளவீட்டுத் துறையில் உள்ளூர் வளங்கள், நிபுணத்துவம் மற்றும் புது கண்டுபிடிப்புக்களினை பயன்படுத்துவதற்கு இது உதவும்.

இறக்குமதி செய்யப்பட்ட கதிர் வழி வான் வெளியிகளை நம்பியிருப்பதைக் குறைப்பதன் மூலம், உள்ளூர் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம், நீண்ட காலத்திற்கு செலவினை குறைத்து சேமிப்பினை கூட்டலாம், தன்னைத்தானே நம்பியிருக்கும் தன்மையினை மேம்படுத்தலாம் மற்றும் வானிலை முன்னறிவிப்பு மற்றும் வளிமண்டல ஆராய்ச்சியில் இயலுமையினை மேம்படுத்துவதற்கான சாத்தியமும் ஏற்படுகிறது.

**திரவ உரங்களினை தெளிக்கும் ட்ரோன் (Drone)**

விவசாயத்தில் திரவ உரம் தெளித்தல் தொடர்பான பயன்பாடுகளின் சமீபத்திய முன்னேற்றங்களாவன, திரவ உரம் தெளிக்கும் ட்ரோன்களில் புது கண்டுபிடிப்புக்களினை முன்னெடுக்க நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தினை தூண்டியது. இந்த ஆரம்பமானது தோட்டத் தொழிற்துறையுடன் குறிப்பாக தேயிலை துறையுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களால் மிகவும் சிறப்பாக வழிநடத்தப்பட்டது. உரம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளிப்பதற்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட high-lift multi-copter அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் விருத்தி செய்தல் தொடர்பில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப சாத்தியக்கூறு பகுப்பாய்வுகளைச் செய்ய இது வழிவகுத்தது.அதன்பின், கருத்தியல் ஆய்வின் வெற்றிகரமான ஆதாரத்தினை அடிப்படையாக கொண்டு கணக்கீடுகளின் அடிப்படையில் அதாவது எடை, தாங்கு திறன், வேகம், திறன் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள் போன்ற அளவுருக்களைக் கருத்தில் கொண்டு ஒரு முன்மாதிரி அமைப்புக்கான உருவகப்படுத்துதல்கள் உருவாக்கப்பட்டு அமைப்பு வடிவமைக்கப்பட்டது.

## VTOL UAV இனை விருத்தி செய்தல்

செங்குத்து அமைப்பில் புறப்பட்டு தரையிறங்கும் வகையிலான ஆளில்லா வான்வழி வாகனம் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. விருத்தி செய்யப்பட்ட இந்த அமைப்பானது, அதிக பாதுகாப்பு தேவைப்படும் இடங்களில் கண்காணிப்புக்கள் நிமித்தம் பயன்படுத்தப்பட்டு வெற்றிகரமான கள சோதனையினை முன்னெடுத்த பின்பு வணிகமயமாக்கல் செய்யப்படும். நாட்டின் பாதுகாப்பு துறையுடன் இணைந்து இதனை பயன்படுத்துவதற்கான ஒரு கூட்டு திட்டத்திற்கான வாய்ப்புகள் ஆராயப்பட உள்ளது.




### ஆளி தாங்குதிறன் பற்றிய சோதிப்பு கருவி தொடர்பில் சேய்மை உணரி சாராமாறி கண்காணிப்பு, பதிவு செய்தல் மற்றும் அலாரம் அமைப்பு

நிறுவகத்தின் மின்னணுப் பிரிவானது, பல்வேறு வகையான ஆளிகளுக்கான சோதனைகளைச் செய்யும்போது கைமுறையாகக் கண்காணிக்கும் ஒரு அலகு ஒருங்கிணைந்த ஆளி சோதிப்பு கருவியினை பயன்படுத்துகிறது. தற்போதைய அமைப்பில், ஏற்றப்பட்ட மின்னோட்டமானது காட்டப்படுவதுடன் நிலையான மின்னோட்ட நிலையினை கண்டறிய கைமுறையாக சரிபார்க்கப்படுகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய முறையானது, மின்னோட்டம் மற்றும் மின்னழுத்தத்தை முன் வரையறுக்கப்பட்ட நேர இடைவெளியின்படி பதிவுசெய்கிறது, தேவைக்கேற்ப தரவை பகுப்பாய்வு செய்ய பயனருக்கு உதவுகிறது. தற்போது தயாரிப்பு செயல்பாட்டில் உள்ளது.




### மின்னலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக ஒரு நிலையத்தினை தாபித்தல்

மின்னல் தொடர்பான சேதங்கள் மற்றும் இழப்புகளைக் குறைத்தல், பாதுகாப்பு நடைமுறைகளை தரப்படுத்துதல் மற்றும் இவ்விடயம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், மின்னலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு ஒரு மையத்தை உருவாக்குவது தொடர்பிலான யோசனையானது நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளாக்கினால் முன்மொழியப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் உதவியுடன் , இந்த மையமானது 2019 முதல் செயல்பட்டு வருகிறது, இதன் முதன்மையான நோக்கங்கள் எனும் போது, அதற்குள் மின்னல் பற்றிய அறிவைப் பரப்புதல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் என்பன அடங்கும். கவனத்தில் கொள்ளப்பட்ட ஆண்டில், கட்டமைப்பு மற்றும் எழுச்சி பாதுகாப்பு அமைப்புகளை வடிவமைத்தல் மற்றும் சோதனைச் சேவைகள் தொடர்பான பல

ஆலோசனைகள் அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.






**தகவல் முறைமை அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில், நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தனிப்பயனாக்கப்பட்ட தகவல் அமைப்பு தீர்வுகளை உருவாக்கி வருகிறது.

**தகவல் தொழில்நுட்ப தீர்வுகளினை விருத்தி செய்தல்**

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து விவசாய – தளம் நிமித்தம் ஒரு வலை தளத்தினை தாபித்தல்**

தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் வழங்கிய ஆலோசனை மற்றும் நூற்புழு பற்றிய அறிக்கைகளின், நிமித்தம் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க்கினால் நிறுவப்பட்ட IoT அமைப்புகளால் சேகரிக்கப்பட்ட காலநிலை மற்றும் மண் தரவைச் சேமிப்பதற்கு இணைய அடிப்படையிலான அமைப்பு உருவாக்கத்தில் உள்ளது எதிர்காலத்தில், இந்தத் தரவுகள் பெயரளவிலான ஒரு கட்டணத்தில் தோட்டக் கம்பனிகளின் ஆராய்ச்சி, திட்டமிடல் மற்றும் இதர செயல்பாட்டுத் தேவைகளுக்குக் கிடைக்கப்பெறும். இணையத்தினை அடிப்படையாக கொண்ட ஒரு தரவுத்தளத்தில் தரவு மற்றும் தொடர்புடைய அறிக்கைகளை சேமிக்க இணைய அடிப்படையிலான இடைமுகங்கள் உருவாக்கப்படும் என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கு மட்டும் அணுகல் அனுமதிக்கப்படும்.






**கையடக்க தொலைபேசி பயன்பாடுகளின் வளர்ச்சி**

பெரிய அளவிலான தோட்டங்கள் மற்றும் சிறிய அளவிலான நிலங்களின் பரப்பளவு பற்றிய தகவல்கள் இல்லாததால் இலங்கையில் தேயிலை பயிர்ச்செய்கையின் பரப்பளவை எதிர்வுகூறல் கடினம் ஆகும். பாரம்பரிய முறைகளைக் கொண்டு ஆய்வு செய்வது நேரத்தைச் அதிகளவில் எடுக்கும் என்பதுடன் செலவினம் மிக்கதாயும் அமையும். எனவே தேயிலை நிலத்தை GPS தரவுகளுடன் offline வரைபடங்கள் மூலம் ஆய்வு செய்வதற்கு Android கையடக்க தொலைபேசி பயன்பாடு சிறந்த தீர்வாகும். இணைய இணைப்பு குறைவாக உள்ள தொலைதூரப் பகுதிகளிலும் கூட இடம் சார்ந்த தகவல்கள் உட்பட தேயிலைத் தோட்டங்கள் பற்றிய துல்லியமான தரவைச் சேகரிக்க இந்தப் பயன்பாடு உதவுகிறது. இந்த பயன்பாடானது, இணைய இணைப்பு இல்லாமலேயே தகவல்களைச் சேகரித்து, இணைப்பு மீட்டமைக்கப்படும்போது பிரதான சேமிப்பகத்தில் தரவைப் பதிவேற்ற கூடியதாக அமைகிறது. பயன்பாட்டின் பயனர் நட்பு இடைமுகமானது, தோட்டம், அறுவடை மற்றும் உரமிடுவதற்கான வயல்களது இருப்பிடத் தரவை கைமுறையாக அல்லது தானாகவே சேமிப்பதன் மூலம் தனிப்பயன் கணக்கெடுப்புகளை உருவாக்க பயனர்களை அனுமதிக்கிறது. தேயிலை மற்றும் பிற பயிர்கள் மற்றும் நில பயன்பாட்டுக்கான துல்லியமான கணக்கெடுப்புத் தரவைச் சேகரிப்பதற்கான திறமையான மற்றும் நம்பகமான கருவியாக இந்தப் பயன்பாடு அமையும்.







**பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்திற்கு MIS தொகுதி**

வாகன முகாமைத்துவம் , களஞ்சியங்கள் மற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் பற்றிய துணைத் தொகுதிகளின் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் செயல்படுத்தல் ஆகியவை நிறைவடைந்தன. மேலும் கீழ் குறிப்பிட்டப்பட்ட பிரதான தொகுதிகள் விருத்தி செய்யப்பட்டன.

- MA மற்றும் BA மாணவர்களுக்கான தேர்வுத் தொகுதியின் மாணவர் பதிவு. வெளித் தேர்வுக் கிளை தொடர்பில் மாணவர் பதிவு பூர்த்தி மற்றும்
- அக மாணவர்கள் தொடர்பில் நிகழ்நிலை அடிப்படையிலான விண்ணப்பதாரர் விவரங்கள் மற்றும் மாணவர் பதிவு செயல்முறை நிறைவு.




| Code | NAME | Address | Address2 | Address3 |
|---|---|---|---|---|
| A1 | LANKA ASHOK LEYLAND PLC | Panagoda | Homagama | Sri Lanka |
| A2 | TOYOTA LANKA PVT LTD | 391/10. | Highlevel Rd. Nawinna | Maharagama |
| A3 | UNITED MOTORS | 100. | Hyde Park Corner. | Colombo 2. |
| A4 | ASSOCIATED MOTORWAYS (PVT) LTD | 185. | Union Place. | Colombo 2. |
| A5 | DAVID PERIS MOTOR COMPANY (PVT) LTD | 120A. | Pannipitiya Road. | Battaramulla. |

**ஓப்பந்த சேவைகள்**

- தரவுத்தளம் மற்றும் ஏனைய முறைமைகளின் ஒப்பந்தங்களினை பேணல்.

- ➢ கணக்கியல் முறைமை – மொறட்டுவ பல்கலைகழகம், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது
- ➢ கணக்கியல் முறைமை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகம், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது
- ➢ சம்பள பட்டியல் முறைமை - அபிவிருத்தி லொத்தர் சபை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது
- ➢ கணக்கியல் முறைமை - பௌத்த மற்றும் பாலி பல்கலைகழகம். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

**நிறுவகத்திற்குள் முன்னெடுக்கப்பட்ட மென்பொருள் விருத்தி**

நிறுவகத்தின் வினைத்திறமை மற்றும் அக நிர்வாக செயன்முறை என்பவற்றின் தரத்தை மென்மேலும் உயர்த்தும் பொருட்டு கீழ்குறிப்பீடு செய்யப்பட்ட அக ரீதியில் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருள் முறைமைகளாவன 2022 ஆம் ஆண்டில் மேலும் விருத்தி செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது.

- செயல் திட்டம் மற்றும் முன்னேற்ற கண்காணிப்பு முறைமை
- கருத்திட்ட பதிவு முறைமை
- விடுமுறை மற்றும் வருகைப் பதிவேட்டு முறைமை
- கணக்கியல் முறைமை
- விலைவிவரப்பட்டியல் முறைமை

**நவீன தொழில் நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க்கின் டியுCே, இணையதளம் மற்றும் தொடர்புடைய வலையமைப்பு சேவைகள்**

நிறுவகத்திற்கான டியுஜே இணையதளம் மற்றும் தொடர்புடைய மின்னஞ்சல் சேவைகளினை பேணுதல்.

## 6.3 வானியலில் ஆராய்ச்சி திட்டங்கள்

**பேரழிவு மாறிலி உடுக்கள பற்றிய சர்வதேச கூட்டு ஆராய்ச்சி**

இ,ந்த ஆராய்ச்சி நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டதன் நோக்கம் வெள்ளை குள்ளன், அக்ரி'ன் டிஸ்க், ரோச்-லோப், ஹாட்ஸ்பாட் போன்ற CV அமைப்புகளின் தனிப்பட்ட கூறுகளுடன் தொடர்புடைய திணிவு பரிமாற்றம், வெடிப்புகள், கோண உந்த இழப்பு, காந்த பண்புகள், சுற்றுப்பாதை இயக்கங்கள் போன்றவற்றில

ஈடுபட்டுள்ள வழிமுறைகள் மூலம், நோவா, நோவா போன்ற அமைப்புகள், குள்ள நோவா, மீண்டும் வரும் நோவா, சூப்பர்நோவா, காந்த மற்றும் ,இடைப்பட்ட காந்த மற்றும் பேரழிவு மாறிலி உடுக்கள் மற்றும் அவற்றின் துணை வகுப்புகள் போன்ற பல்வேறு பேரழிவு மாறிலி உடுக்கள் அமைப்புகளில் உள்ள பரிணாம பண்புகளை ஆய்வு செய்து ஆராய்வதாகும் இந்த சர்வதேச கூட்டு ஆராய்ச்சி திட்டம் சீன அறிவியல்

அகாடமியின் கீழ் யுனான் வானியல் ஆய்வகத்துடன் இணைந்து 2018 இல் தொடங்கப்பட்டது. இந்த காலகட்டத்தில் அமெரிக்க வானியல் சங்கத்தின் இதழ்கள் உட்பட நான்கு சர்வதேச பத்திரிகை வெளியீடுகள் மற்றும் இரண்டு உள்ளூர் வெளியீடுகள் நிறைவுசெய்யப்பட்டன. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரயோக விஞ்ஞான சஞ்சிகை இளங்கலை ஆராய்ச்சி கருத்தரங்கு (APSURS)- 2022 இல் ஒரு ஆய்வுக் கட்டுரை வெளியிடப்பட்டது.

**இலங்கைக்கான சூரிய சாராமாறி கணிப்பீடு பொறி**

பைதான் நிரலாக்க மொழி மற்றும் வானியல் வழிமுறைகளைப் பயன்படுத்தி சூரியன் அளவுருக்களைக் கணக்கிட்டுக் காண்பிக்க ஒரு விண்டோஸ் பயன்பாடு உருவாக்கப்பட்டது. இந்த பயன்பாட்டின் முக்கிய பயன்பாடானது, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சூரியனின் நேரங்களையும் நிலைகளையும் கண்டறிவதாகும். இந்தப் பயன்பாட்டின் அடிப்படையில் பாடசாலை பாடத்திட்டத்தில் வானியல் செயல்பாடுகளை அறிமுகப்படுத்தலாம். சூரிய பலகங்களில் இருந்து வினைத்திறன் மிக்க முறையில் மின்சாரத்தை உருவாக்குவதற்கும் சூரியனை அவதானிக்கவும் சூரியனின் நிலநிரைகோடுகளினை உள்ளிடவும் இந்த பிரயோகப்பொதியானது பயன்படுத்தப்படலாம்.




**வானியல் நிறமாலைமான ஆராய்ச்சிக்காக புதிய Echelle நிற மாலைமானத்தினை அமைத்தல்**

Echelle நிற மாலைமானமானது ஒரே நேரத்தில் உயர் நிறமாலை தெளிவுத்திறன் மற்றும் பெரிய நிறமாலை அலைவரிசைகளை வழங்குகின்றன. இந்த கருவி நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க்கின் வானியல் பிரிவில் வெற்றிகரமாக அமைக்கப்பட்டது. இந்த நிறமாலைமானி மூலம் சூரியனின் உயர் தெளிவுத்திறன் நிறமாலைமானம் பெறப்பட்டது.





## 6.4. சேய்மை உணரி (RS) மற்றும் புவி பட வரைபியல் தகவல் முறைமையில் (GIS )ஆராய்ச்சி கருத்திட்டங்கள்

**அம்பாறை மாவட்டத்தில் மழைநீரின் மூலம் ஆழமான நீர்நிலைகளினை மீள் நிரப்ப கூடிய இடங்களை அடையாளம் காண விண்வெளி தொழில்நுட்ப அடிப்படையிலான அணுகுமுறை**




